செயற்பொறியாளர், நீர்வளத்துறை., காவிரி வடிநிலக் கோட்டம், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறைகள்.

பிறப்பிப்பவர்:- பொறிஞர்.ஆர்.சொர்ணகுமார், பி.இ.,
செயற்பொறியாளர், நீ.வ.து.,

<u>செ.மு.ஆணை எண்.கோ.03(1)/2021/நிஎ-1/நாள்.01-11-2021</u>

பொருள்:- பணி அமைப்பு – த.நா.அ.ப – திருமதி.செ.இலக்கியா (பிறந்த தேதி:20.08.1989) இளநிலை உதவியாளர் – த.நா.தேர்வாணைய குழுமத்தால் தெரிவு – இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து தகுதிகாண் பருவம் துவக்கி – ஆணை – அளித்தல்.

பார்வை:- 1.செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்.2496/PSD-I/2020/ நாள்.29-05-2020.

2.முதன்மை தலைமைப்பொறியாளர், நீஆது., மற்றும் தலைமைப்பொறியாளர்(பொது), பொபது., சேப்பாக்கம், சென்னை அவர்களின் கடித எண்.எஸ்.3(3)/35935/2020/ நாள்.17-09-2020.

3.தலைமைப்பொறியாளர், நீ.வ.து., பொ.ப.து., திருச்சி மண்டலம், திருச்சி அவர்களின் செ.மு.எண்.சி-2/6367/2020/ நாள்.21-09-2020.

4.கண்காணிப்புப் பொறியாளர், நீ.வ.து., கீழ்க்காவிரி வடிநில வட்டம், தஞ்சாவூர் அவர்களின் செ.மு.எண்.1924/2020-3/ நி-1/நாள்.23-09-2020.

5.இவ்வலுவலக செ.மு.எண்.கோ.21(1716)/2020/நிஎ-1/ நாள்.24-09-2020.

**************

இக்கோட்ட அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் திருமதி.செ.இலக்கியா (பிறந்த தேதி:20.08.1989) இளநிலை உதவியாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெற்ற 2018-2019 மற்றும் 2019-2020-ஆம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப்பணிகளுக்கான போட்டித்தேர்வு தொகுதி IV-.இல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு பார்வை எண் 2முதல் 5வரையிலான செயல்முறை ஆணைகளின்படி 25.09.2020 முற்பகல் முதல் பணியேற்று தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

தனியரது பணி அவர்தம் இளநிலை உதவியாளர் பதவியில் பணி ஏற்ற நாளான 25.09.2020 முற்பகல் முதல் தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம் 14/2016) பிரிவு 28(1)-இன்படி பணி வரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து தனியரது தகுதிகாண் பருவம் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாளான 25.09.2020 முற்பகல் முதல் துவக்கி ஆணை அளிக்கப்படுகிறது. மேலும் தகுதிகாண் பருவ காலத்தினை மூன்றாண்டு தொடர் பணியில் இரண்டாண்டு காலத்தினை நிறைவு செய்திடல் வேண்டும் எனவும், அக்காலகட்டத்திற்குள் அரசு அலுவலர் பயிற்சி நிலையம் பவானிசாகரால் நடத்தப்பெறும் அரசு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சிபெற வேண்டும் என்ற நிபந்தனையுடன் இவ்வாணை வழங்கப்படுகிறது.

மேலும் பார்வை எண் 1-இல் காணும் அரசு கடிதம் பத்தி 5-இல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி இந்த பணிநியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் 2018-19 மற்றும் 2019-20-ஆம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான போட்டித்தேர்வு தொகுதி-IV-இன் தொடர்பாக தொடுக்கப்பட்ட வழக்குகளின் வழங்கப்படவுள்ள தீர்ப்பிற்குட்பட்டது என்ற நிபந்தனையுடன் இந்த பணிவரன்முறை ஆணை வழங்கப்படுகிறது.

2/4/24

செயற்பொறியாளர், நீர்வளத்துறை.,
காவிரி வடிநிலக் கோட்டம், தஞ்சாவூர்.

2/11/2024

2/11/24

<u>பெறுநர்:</u>
திருமதி.செ.இலக்கியா,
இளநிலை உதவியாளர், நீ.வ.து.,
கோட்ட அலுவலகம், தஞ்சாவூர்.